<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி</u>

நாள்: 19.03.2025 அ.வ.எண்.325/2021 வா.சா.1 எம்.சிவகுருநாதன்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) கடந்த 05.02.2010 நானும், பிரதிவாதியும் கடைசியாக வாடகை ஒப்பந்தம் செய்துக்கொண்டு அந்த வாடகை ஒப்பந்ததை பிரதிவாதி மீறியதாக சொல்லும் நிலையில் வாடகை செலுத்தவில்லை என்றோ, கடையை காலிசெய்யசொல்லியோ வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) பிரதிவாதி வாடகை சொத்தில் இருந்து சட்டப்படி இல்லாமல் தன்னை காலிசெய்யகூடாது என்று எனக்கு எதிராக அ.வ.எண்.193/2010 தாக்கல் செய்து பிரதிவாதிக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) கடந்த 05.02.2010 ஒப்பந்ததிற்கு பிறகு பிரதிவாதி போலியாக வாடகை ஒப்பந்தம் தயார் செய்ததாக சொல்லுவது குறித்து அந்த ஒப்பந்தத்தை சிறப்பு நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

4) பிரதிவாதி எனக்கு எதிராக தாக்கல் செய்த ஆர்.சி.ஓ.பி.எண்.12/2010-ம் பிரதிவாதி சார்பாக தீர்ப்பானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5) ஆர்.சி.ஓ.பி.எண்.12/2010-ல் பிறப்பிக்கப்ட்ட உத்தரவின் படி மாத வாடகையான ரூ.400/- ஐ தவறாமல் இதே நீதிமன்றத்தில் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான்.

6) எனது சகோதரர் செந்தில்குமார் இதே நீதிமன்றத்தில் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்த ஆர்.சி.ஓ.பி. மனுவில் இந்த பிரதிவாதி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த வாடகை இரசீதுகளை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்குறித்து திட்டம்மிட்டு எனது சகோதரர் செந்தில்குமார் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டு

மோசடியாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) பிரதிவாதி எந்த தொகையும் எனக்கு செலுத்தவேண்டியதில்லை என்றும், வாடகை சொத்திற்கான வாடகையை அவர் முறையாக இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து வருகிறார் என்றும், சொன்னால் சரியல்ல.

9) பிரதிவாதியிடம் இருந்து இவ்வழக்கில் கோரியுள்ள தொகையை வசூலிக்க சட்டப்படி எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கான வழக்கு மூலம் இல்லை என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.